**செய்தி வெளியீடு** **நாள்: 13.02.2026**

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திருக்கரங்களால் சிஎம்டிஏ உள்ளிட்ட பல்வேறு துறைகளில் கட்டப்பட்டு வரும் 20–க்கும் மேற்பட்ட திட்டங்கள் இந்த மாதம் 25ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படும்.**

**மாண்புமிகு அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் தகவல்.**

*****

**மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின்** நல்வழிகாட்டுதலின்படி இன்று (13.02.2026) திரு.வி.க. நகர் சட்டமன்றத் தொகுதியில் வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் சி.எம்.டி.ஏ. சார்பில் மேம்படுத்தப்பட்டு வரும் **ஓட்டேரி, சுப்புராயன் தெருவிலும், ஜமாலியா, மங்களபுரத்திலும், வியாசர்பாடி, புதிய வெங்கடேசபுரத்திலும் மற்றும் பட்டாளம் பக்தவசலம் பூங்காவிலும்** உள்ள **"முதல்வர் படைப்பகங்களின்"** முன்னேற்றப் பணிகள் குறித்து மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான **திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள்** நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து, பணிகளை விரைந்து முடித்திட அலுவலர்கள் மற்றும் ஒப்பந்ததாரர்களை அறிவுறுத்தினார்.

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் செய்தியாளர்களிடம் பேசும்போது தெரிவித்ததாவது :**

**மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்** மக்கள் பயன்பாட்டிற்கு வழங்க உள்ள திட்டங்கள் அனைத்தும், அவர்களின் சிந்தனையில் உதித்த மகத்தான திட்டங்களாகும். வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்கள், வீட்டில் நல்ல சூழல் இல்லாமல் படிப்பதற்கு வசதி இல்லாத மாணவச் செல்வங்கள், வீட்டில் நடைபெறும் சுப நிகழ்ச்சிகளுக்குக் கூட அதிக பொருளாதாரச் செலவினால் விழாக்களை நடத்த இயலாத மக்கள், பள்ளிகளில் தேவையான கட்டமைப்பு வசதிகள் இல்லாததால் மாணவர்களின் தேர்ச்சி விகிதம் குறைந்து வரும் சூழல் – இவ்வாறான அனைத்தையும் முழுமையாக அகற்ற வேண்டும் என்பதே இந்தத் திட்டங்களின் நோக்கம். மேலும், சிஎம்டிஏ உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 20–க்கும் மேற்பட்ட திட்டங்கள் இந்த மாதம் 25ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரப்படுகின்றன.

போக்குவரத்து கழகம் தொடங்கப்பட்டு 50 ஆண்டுகள் நிறைவு பெறுவதையொட்டி, 50ஆம் ஆண்டு விழாவை முன்னிட்டு புதிய போக்குவரத்து பணிமனைகள் கட்டப்படுகின்றன. விளையாட்டு மைதானங்கள் உருவாக்கப்படுகின்றன. சலவைத் தொழிலாளர்கள் – நாம் அணியும் உடைகள் வெண்மையாக இருக்க வியர்வை சிந்தி உழைக்கும் அவர்கள் – அவர்களின் சலவைக்கூடங்கள் புதுப்பித்து கட்டப்படுகின்றன.

இந்தத் திட்டங்களுக்கான ஆய்வு பணிகளை இன்று நானும், பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் அன்பிற்கினிய திருமதி.பிரியா ராஜன் அவர்களும், சட்டப்பேரவை உறுப்பினர் திரு.தாயகம் கவி அவர்களும், மாநகராட்சி ஆர்.டி.சி. திரு.கௌசிக் அவர்களும் மண்டலக் குழுத் தலைவர் அன்பிற்கினிய திருமதி.சரிதா மகேஷ்குமார் அவர்களும், இந்த வட்டத்தின் முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் அன்பிற்கினிய திரு.தமிழ்வேந்தன், திரு.புஷ்பராஜ் அவர்களும், இணைந்து ஆய்வினை மேற்கொண்டோம்.

மேலும், சென்னை குடிநீர் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியம், மின்சாரத் துறை உள்ளிட்ட அனைத்து துறைகளும் ஒருங்கிணைந்து பணிகளைச் செய்து வருகின்றன. இந்த அனைத்து பணிகளும் 25ஆம் தேதிக்குள் மக்கள் பயன்பாட்டிற்கு அர்ப்பணிக்கப்படும்.

இந்த ஆய்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி.ஆர்.பிரியா, திரு.வி.க. நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, மத்திய வட்டார துணை ஆணையர்

Verified @ RealEstate™

திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மண்டலக் குழுத்தலைவர் திருமதி.சரிதா மகேஷ்குமார், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ஃபர்கத் பேகம், கண்காணிப்புப் பொறியாளர்கள் திரு.பாலமுருகன், திரு.ராஜன்பாபு, மாவட்ட நூலக அலுவலர் முனைவர் மு.கவிதா, மாமன்ற உறுப்பினர்கள் திரு.சரவணன், திருமதி.தமிழ்செல்வி, முன்னாள் மாமன்ற உறுப்பினர் திரு.தமிழ்வேந்தன், உள்ளாட்சி பிரதிநிதிகள் மற்றும் அலுவலர்கள் ஆகியோர் உடனிருந்தனர்.

Verified RealEstate™